இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 09-07-2025

# வாக்காளர்களை நீக்கும் பா.ஜ.க.வின் சதிகள்!

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி எந்த எச்சரிக்கையைச் செய்தாரோ அதை பீகாரில் செய்யத் தொடங்கிவிட்டது பா.ஜ.க.!

**“போலி வாக்காளர்களைப் பட்டியலில் சேர்த்தல், வாக்காளர் வாக்குப்பதிவை உயர்த்துதல், பா.ஜ.க. வெற்றிபெற வேண்டிய பகுதிகளில் போலி வாக்காளர்களைச் சேர்த்தல், அதன்பிறகு அதற்கான ஆதாரங்களை மறைத்தல் போன்றவற்றை ‘மேட்ச் பிக்சிங்’ மாதிரி செய்கிறது பா.ஜ.க.” என்று மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத் தேர்தலை முன் வைத்து ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினார் ராகுல் காந்தி. அதனைத்தான் வெளிப்படையாக பீகாரில் செய்யத் தொடங்கி இருக்கிறது பா.ஜ.க.**

எதிர்க்கட்சிகளின் வாக்குகளை முன்கூட்டியே நீக்கும் சதியை பீகாரில் தொடங்கி இருக்கிறார்கள். பீகார் மாநிலத்தில் இந்தாண்டு இறுதியில் சட்டசபைத் தேர்தல் நடைபெறுகிறது. இதையடுத்து பீகாரில் ‘சார்’ எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த நடவடிக்கையை (special intensive revision- SIR) பீகார் அரசு எடுத்து வருகிறது. இதற்கு அங்குள்ள எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

பொதுவாக தேர்தல் நேரத்தில் வாக்காளர்கள் பட்டியல் திருத்தம் செய்யப்படும். பெயரைச் சேர்க்க வேண்டியவர்கள் சேர்த்துக் கொள்ளலாம். நீக்கம், திருத்தம் செய்பவர்கள் அதனைச் செய்யலாம். இதற்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். ஆனால் இப்போது பீகாரில் நடப்பது திருத்தம் அல்ல; மாற்றம். முழுமையான மாற்றம் ஆகும்.

வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்து வருகின்றனர். அப்போது வாக்காளர்களுக்கு படிவங்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றை வாக்காளர்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். 2003-ஆம் ஆண்டுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் சேர்ந்தவர்கள் இந்திய குடிமகன் என்பதற்கான பிறப்புச் சான்றிதழ் அல்லது பாஸ்போர்ட் உள்ளிட்ட 11 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். குடியுரிமைச் சட்டத்தின் இன்னொரு வடிவம் போல இதனை மாற்றி விட்டார்கள்.

இந்த ஆவணங்கள் இல்லை என்றால், அவர்களது பெற்றோர்களின் குடியிருப்பு ஆவணங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதனையும் வழங்கா விட்டால் வாக்காளர் பெயரை நீக்குவது குறித்து அந்தப்பகுதி வாக்குச்சாவடி அலுவலர் முடிவு செய்வார்.

8 கோடி வாக்காளர்களுக்கும் புதிய படிவங்கள் வழங்கப் பட்டுள்ளன. “2003 பட்டியலில் பெயர் இல்லாதவர்கள், 1987க்கு முன் பிறந்திருந்தால், பிறப்புச் சான்றிதழ் கட்டாயம்” என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 4.76 கோடி வாக்காளர்கள் சிரமத்துக்கு உள்ளாகி உள்ளார்கள் என்று ஒரு ஆய்வு நிறுவனம் சொல்லி இருக்கிறது. பீகாரில் இருந்து பல லட்சம் பேர் வேலைக்காக, பல்வேறு மாநிலங்களுக்குப் போய்விட்டார்கள். இவர்கள் வாக்குரிமை பறிக்கப்படும் சூழல் உள்ளது. இந்த நடவடிக்கை லட்சக்கணக்கானவர்களின் வாக்குரிமையை பறிக்கும் செயல் என்று காங்கிரஸ் கட்சி விமர்சித்து உள்ளது.

**“பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர், பீகாரில் உள்ள 8 கோடி மக்களின் வாக்குரிமையை பறிக்க முயற்சிக்கிறார்கள். இவர்கள் இருவரும் பீகாருக்கும், அரசியலமைப்புக்கும், இந்திய ஜனநாயகத்துக்கும் எதிரானவர்கள். அரசியலமைப்பையும், ஜனநாயகத்தையும் காப்பாற்றுங்கள்”** என்று பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஆர்.ஜே.டி தலைவர் தேஜஸ்வி, **“பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த பிரதமர் மோடி முயற்சி செய்கிறார். தேர்தல் ஆணையம் ஒரு கைப்பாவையாக மாறிவிட்டது. வாக்காளர் சிறப்பு திருத்தம் குறித்து அரசியல் கட்சி களிடம் தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்தவில்லை. இதில் நீதி எங்கே? தேர்தல் ஆணையம் தனது முடிவுகளை ஒவ்வொரு மணி நேரமும் மாற்றிக் கொண்டிருக்கிறது”** என்று முன்னாள் துணை முதலமைச்சர் தேஜஸ்வி குற்றம்சாட்டி இருக்கிறார்.

‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் சார்பில் பீகாரில் இன்று (ஜூலை 9 ஆம் தேதி) முழு அடைப்பு போராட்டம் நடக்க இருக்கிறது. இதில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்கிறார்.

தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவுக்கு எதிராக ராஷ்ட்ரீய ஜனதா தளம் எம்.பி.யான மனோஜ் ஜா, திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி.யான மஹுவா மொய்த்ரா, ஜனநாயக சீர்திருத்தத்துக் கான சங்கம் ( ஏ.டி.ஆர்.) ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். நீதிபதிகள் சுதான்சு துலியா, ஜோய் மல்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு நாளை (10ந் தேதி) விசாரிக்கிறது.

**பீகார் மாநிலத்தில் தேர்தல் ஆணையம் தற்போது மேற்கொண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி, மிகமிக குழப்பமான சூழலை உருவாக்குகிறது. 2003 ஆம் ஆண்டு வரை வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாத சுமார் 2.93 கோடி வாக்காளர்கள், வாக்களிக்கத் தகுதியானவர்கள் என்பதை நிரூபிக்க, குறிப்பிடப்பட்டுள்ள 11 ஆவணங்களில் குறைந்தது ஒன்றையாவது தர வேண்டும். இதனை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் முடிக்க வாய்ப்பே இல்லை. இவர்கள் அனைவரையும் நீக்குவதற்கான சதியாக இதனை பார்க்க வேண்டி உள்ளது.**

**ஆதார் அட்டை இருந்தால் போதும், வாக்காளர் அட்டை இருந்தால் போதும் என்று இதுவரை சொல்லி வந்தார்கள். இதனை உரிய ஆவணமாக இப்போது ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். அப்படியானால் இந்த அட்டைகளுக்கு என்ன மரியாதை? இதனை வழங்கியதும் ஒன்றிய அரசு தானே? தேர்தல் ஆணையம் தானே? ஒன்றிய அரசு தந்த, தேர்தல் ஆணையம் தந்த அட்டைகளையே செல்லாது என்று சொல்லும் அளவுக்கு தீவிரமான நடவடிக்கைகள் இப்போது ஏன் செய்யப்படுகின்றன?**

இங்கேதான் பா.ஜ.க.வின் சதி இருக்கிறது. இதுவரை தேர்தலில் சதி செய்தவர்கள், இப்போது தேர்தலுக்கு முன்பாகவே சதிச் செயலைத் தொடங்கி விட்டார்கள். வாக்குரிமையைப் பறித்தலின் மூலமாக இதனைத் தொடங்குகிறார்கள். தீவிர திருத்தம் என்பதன் மூலமாக ‘தீவிர அழுத்தம்’ கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

**இந்திய நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிப்பது, மிகமிக மோசமான சர்வாதிகாரத்தின் தொடக்கம் ஆகும். இதனை தேர்தல் ஆணையத்தின் மூலமாக சட்டப்படி செய்வது, சர்வாதி காரத்துக்கான சட்ட அங்கீகாரமும் ஆகும். பீகார் மாநிலத்துக்கு இப்போது நடப்பதுதான் இனி எல்லா மாநிலத்துக்கும் நடக்கும். இதனை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும்.**

**இது பீகார் பிரச்சினை அல்ல; இந்தியாவின் பிரச்சினை ஆகும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் சந்தித்து, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு துறைகளின்கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் இனி ‘சமூகநீதி விடுதிகள்’ என்று அழைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். உடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச்செல்வன், எஸ்.எஸ். பாலாஜி, எம்.பாபு, முகமது ஷா நவாஸ், முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களின் பேத்தி டாக்டர் மீனாட்சி விஜயகுமார் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.7.2025) முகாம் அலுவலகத்தில், பேராசிரியர் அவர்களின் மகன் அன்புச்செல்வன் அவர்கள் சந்தித்து, “ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டம் மக்கள் மத்தியில் மகத்தான வரவேற்பை பெற்றுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். உடன் பேராசிரியர் அவர்களின் பேரனும், சட்டமன்ற உறுப்பினருமான அ.வெற்றியழகன் உள்ளார்.

# பீகார் வாக்காளர்களின் உரிமையைப் பறிப்பதா?

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

**சென்னை, ஜூலை 9 - பீகார் வாக்காளர்களிடம் தேவையற்ற ஆவணங்களை கேட்டு, அவர்களின் வாக்களிக்கும் உரிமையைக் பறிக்கும் செயலை தேர்தல் ஆணையம் உடனடியாக கைவிட வேண்டும் என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

பீகாரில் ஐக்கிய ஜனதா தளம் பா.ஜ.க., கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இம்மாநிலத்தில் நிதிஷ்குமார் முதலமைச்சராக இருந்து வருகிறார். இவரது ஆட்சிக்காலம் முடிவடையவுள்ள நிலையில், பீகாரில் விரைவில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து பணிகளையும் தேர்தல் ஆணையம் முடுக்கி விட்டுள்ளது.

அதன் ஒருபகுதியாக வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், பல முறைகேடுகள் நடைபெறுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஐக்கிய ஜனதா தளம் மற்றும் பா.ஜ.க.வுக்கு எதிராக உள்ள வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் மூலம் முயற்சிகள் நடை பெறுவதாக எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது,

வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்தை வாக்காளர்களுக்கு ஏற்ற வகையில் எளிமையாக மேற்கொள்ளாமல், கடுமையாக மேற்கொள்வது ஏன் என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பிறப்பு சான்றிதழ், பள்ளி சான்றிதழ் உள்ளிட்ட 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பித்தால்தான் வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கும் என்றும், இல்லையென்றால் நீக்கப்பட்டுவிடும் என்றும் அறிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பல லட்சம் வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படும் அபாயம் எழுந்துள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வளவு ஆண்டுகாலம் வாக்களித்து வந்தவர்களிடம், சிறப்பு திருத்தம் என்று கூறி கடுமையான ஆவணங்களை கேட்பது நியாயமற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதார் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் அனைவரிடமும் இருக்கும்போது, இல்லாத 11 ஆவணங்களை கேட்பது, தங்களுக்கு எதிராக உள்ள வாக்காளர்களை நீக்கும் செயல் என்று விமர்சித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் முரண்பாடுகள் நிறைந்ததாக உள்ளது என்றும், வாக்காளர் உரிமைக்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் உள்ளது என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் செயல், தவறான சேர்க்கை அல்லது நீக்கத்து வழிவகுக்கும் என்றும், வாக்காளர் பட்டியலின் நேர்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளது.

தேவையற்ற ஆவணங்களை கேட்டு, குடிமக்களின் வாக்களிக்கும் உரிமையை பறிக்கும் செயலை தேர்தல் ஆணையம் உடனடியாக கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த கட்டுப்பாடுகளை எளிமையாக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், இல்லம்தோறும் சென்று கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை மற்றும் பரப்புரை இயக்கத்தில் பங்கெடுத்து கழக உறுப்பினர்களைச் சேர்தார். அதுபோது அமைச்சர் மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ்ராஜன், மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.